யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (ஐ.இ)

**Jaffna Hindu College Old Boys Association (UK)**

Estd 1987

# கலையரசி
# Kalaiyarasi
# 2015

**11 JULY 2015**

**FAIRFIELD CONCERT HALL, CROYDON**




**1890 - 2015**

**125 YEARS OF EXCELLENCE**

# LINKS LEGAL
SOLICITORS

*Today's legal solutions*

## We've been helping thousands with the law, how can we help you?





*Contact:*

**Jeevah D. Haran**
Consultant Solicitor

Mobile: 0795 728 9061 | Email: jeevah@linkslegal.co.uk
DDI: 0208 498 7219 | Tel: 020 8551 0999

| | |
|---|---|
| Immigration (Visa Applications and Appeals) | - குடிவரவு (இசைவு விண்ணப்பங்கள் மற்றும் மேன்முறையீடு) |
| Residential Conveyancing | - வீடு கொள்வனவு \| விற்பனை |
| Commercial Conveyancing | - வர்த்தக காணிகள் கொள்வனவு \| விற்பனை |
| Business Transfers | - வியாபார மற்றும் குத்தகை கைமாற்றங்கள் |
| Commercial Litigation | - வர்த்தகம் சார்ந்த வழக்குகள் |
| General Litigation | - பொது வழக்குகள் |
| Family & Children | - குடும்பம் மற்றும் பிள்ளைகள் சார்ந்த வழக்குகள் |
| Landlord & Tenant | - வாடகைப் பிணக்குகள் |
| Wills & Probate | - உயில் எழுதல் மற்றும் உறுதிப்படுத்தல் |
| Employment Law | - தொழில்சார் சட்டம் |
| Crime | - குற்ற வழக்குகள் |

ACCREDITED MEMBERS OF THE LAW SOCIETY'S CONVEYANCING QUALITY SCHEME

42 Redbridge Lane East, Ilford, Essex, IG4 5EX | Tel: 0208 551 0999 | Fax: 0208 551 2979 | Email: info@linkslegal.co.uk

WWW.LINKSLEGAL.CO.UK

THE MARK OF EXCELLENCE FOR THE HOME BUYING PROCESS.

THE LAW SOCIETY ACCREDITED Conveyancing Quality

Jaffna Hindu College Old boys' Association (UK)
(Estd 1987)

Proudly celebrating 125 years of excellence of our school
With

# கலையரசி
# KALAIYARASI
# 2015

**11th July 2015**
**Saturday**

**Chief Guest**
**Mr Iyampillai Thayanandarajah** B.Com Hons, PGDE, PGDEM, MEd
(JHC 1972-1976, Principal, Jaffna Hindu College)

**Guest of Honour**
**Mr Rajaratnam Rajalingam** BSc (Eng), Dip THE, C Eng, MICE
(JHC 1955 - 1965, Vice President of OBA UK 1991 to 1993)

**Fairfield Concert Hall**
Park Lane, Croydon, CR9 1DG

# கல்லூரிக் கீதம்

வாழிய யாழ்நகர் இந்துக் கல்லூரி
வையகம் புகழ்ந்திட என்றும் (வாழி)

இலங்கை மணித்திரு நாட்டினில் எங்கும்
இந்து மதத்தவர் உள்ளம்
இலங்கிடும் ஒருபெருங் கலையகம் இதுவே
இளைஞர்கள் உளம் மகிழ்ந் தென்றும்


கலைபயில் கழகமும் இதுவே பல
கலைமலி கழகமும் இதுவே - தமிழர்
தலைநிமிர் கழகமும் இதுவே

எவ்விடமேகினும் எத்துயர் நேரினும்
எம்மன்னை நின்னலம் மறவோம்
என்றுமே என்றுமே என்றும்
இன்புற வாழிய நன்றே
இறைவன தருள்கொடு நன்றே!

ஆங்கிலம் அருந்தமிழ் ஆரியம் சிங்களம்
அவையியல் கழகமும் இதுவே
ஓங்குநல் லறிஞர்கள் உவப்பொடு காத்திடும்
ஒருபெருங் கழகமும் இதுவே!
ஒளிர்மிகு கழகமும் இதுவே!
உயர்வுறு கழகமும் இதுவே!
உயிரின கழகமும் இதுவே!

தமிழரெம் வாழ்வினிற் தாயென மிளிரும்
தனிப்பெருங் கலையகம் வாழ்க!
வாழ்க! வாழ்க! வாழ்க!

தன்னிகர் இன்றியே நீடு
தரணியில் வாழிய நீடு.



# Message from Principal


**JAFFNA HINDU COLLEGE**

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**

யாழ்ப்பாணம் - இலங்கை

Phone : 021 222 2431, Fax 021 222 2431
E.mail : principal @ jhc.lk Web page : www.jhc.lk

Jaffna - Sri Lanka

Deputy Principal
**P.Gnanathesigan**
*B.A. Dip. in Ed., M.Ed., SLPS*

Principal
**I.Thayanandarajah**
*B.Com(Hons),PGDE,PGDEM,M.Ed*

Deputy Principal
**S.Nimalan**
*Sc.Spl.Trd., B.A., M.A.(Pub. Admin.), Dip. in. Ed., SLPS*

Vice Principal
**N.Parameswaran**
*B.Sc, Dip. in. Ed. M.Ed. SLPS*


## கலையரசி 2015 இற்கு வாழ்த்துக்கள்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்பது யாழ்ப்பாணப் பழம் தமிழர் மரபில் இருந்து ஊற்றெடுத்து இன்று உலகமெல்லாம் பிரவாகித்துக் கொண்டிருக்கின்ற மகாநதி.

சைவத்தமிழ்ப் பண்பாடும் கணிதக் கலாசாரமும் ஒன்றினைந்து அதனுடைய இன்று உலகை அலங்கரிக்கின்ற அறிவியல் மேதைகளையும், பொறியியல் விற்பன்னர்களையும், தத்துவ ஞானிகளையும், வித்துவமேதைகளையும், வானியல் விஞ்ஞானிகளையும், ஞான இயல் மெய்ஞானிகளையும் மற்றும் மருத்துவம், வேதியல், மெய்யியல், உயிரியல், கணக்கியல், சட்டம், பாதுகாப்பு இரசாயனவியல் கல்வியியல், கணனியியல் என்று இக்கல்லூ ரித்தாயினால் பிரசவிக்காத குழந்தைகள் எதுவுமே இல்லை என்னுமளவிற்கு உயர்ந்து நிற்கின்ற தனிப்பெரும் கலையகம்.

எனது அறிவிற்கு எட்டிய வரை உலகிலே அதிக நாடுகளிலிலே தனது குழந்தைகளுக்கு பழைய மாணவர் சங்கம் என்ற தொட்டில் அமைத்து அரவணைத்திருக்கின்ற கல்லூரி எமதே என்பதில் இக்கல்லூரியின் மைந்தர்கள் நாம் அனைவரும் பெருமையடைகின்றோம்.

இவ்வாறு பெருமை பெற்ற எமது கல்லூரி தனது 125ஆவது ஆண்டினை நிறைவு செய்யும் இக்காலத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பிரித்தானிய பிரதிநிதிகள்
தமது கல்லூரி அன்னைக்கு நன்றி செலுத்தும் விதமாக மிகப் பிரமாண்டமான வகையில் ஏற்பாடு செய்கின்றதும், வான்புகழ் கொண்ட இந்து அன்னையின் மடியில் வளர்ந்து அன்னைக்குப் புகழ் சேர்க்கின்ற வகையில் தாம்



உயர்ந்தது போல் விழாவினையும் பெரும் விழாவாக பெருமையுடன் வழங்கும் கலையரசி 2015 இனை புதிய மெருகுடனும், இவ்வாறானதொரு விழாவினை இந்துக் கல்லூரி மாணவர்களால் மட்டுமே ஏற்பாடு செய்ய முடியும் என்ற ஒரு உன்னத செய்தியை உலகிற்கு எடுத்துக்காட்டுவது போல ஏற்பாடு செய்துள்ளார்கள்.

இலங்கைக்கு வெளியே யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்களில் மிகவும் மூத்த சங்கமாக இன்று 28 ஆண்டுகளை நிறைவு செய்து இந்து அன்னையின் 125வது பிறந்த ஆண்டை மிகச் சிறப்பாக நினைவு கூருகின்றனர். இச்சந்தர்ப்பத்தில் இவர்கள் கல்லூரி அன்னைக்கு ஆற்றி வரும் சேவைகள் அளப்பரியன.

தமது சகோதரர்களை உலகில் முதன்மையானவர்களாக வளர்த்தெடுக்க ஆர்வம் கொண்டு கல்வியிலே, விளையாட்டிலே, மற்றும் இணைந்த கலைத்திட்டச் செயற்பாடுகளிலே, பௌதிகவள விருத்தியிலே தமது சகோதரர்களின் மென்திறன் விருத்தியிலே, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு துறைகளிலே பல செயற்திட்டங்களை மிகுந்த பொருட்செலவிலே பல மில்லியன் ரூபாய்களை முதலிட்டு இத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றனர்.

இந்த நன்மைகள் எல்லாவற்றையும் அனுபவிக்கின்ற ஒரு சந்தர்ப்பத்தை இவர்களால் எனது அதிபர் பதவிக்காலத்தில் நானும் பெற்றிருக்கின்றேன் என்பதை இக்கல்லூரியின் முதல்வர் என்ற வகையில் மிகுந்த அன்புடன் இங்கு பதிவு செய்கின்றேன்.

இவை மட்டுமன்றி கொடிய யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட எம்மவர்களின் வாழ்வு வளம்பெறவும் தாங்கள் ஆற்றிவரும் அரும்பெரும் சேவைகளை நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

எமது கல்லூரி வெறுமனே அரசின் கொள்கைகளை அமுல்படுத்தும் ஒரு களமாக அன்றி அதற்கு மேலாக ஆன்மீகம், மொழி, புரிந்துணர்வு, அன்பு, கருணை, தலைமையேற்றல், பரோபகாரம் என்னும் பல் ஆளுமைகளைக் கொண்ட (Multi Personality) மனிதர்களாக எங்கள் அனைவரையும் உருவாக்கி இருக்கின்றது. உருவாக்கியும் வருகின்றது.

இதனால்தான் யாழ் இந்துவின் மைந்தர்களாகிய நீங்கள் சாதிக்கப் பிறந்தவர்களாக இங்கு வலம் வருகின்றீர்கள்.

எமது கல்லூரியின் 125ஆம் ஆண்டு நிறைவின் மாபெரும் விழாவாக கலையரசி 2015இற்கு என்னையும் எனது துணைவியாரையும் அழைத்து கௌரவித்தமைக்காக நாம் மிகவும் நன்றியுடையோம். உங்களது அன்பும் வரவேற்பும் மேலும் எமது பணியினை சிறப்பாக ஆற்றுவதற்கு தூண்டு கோலாக அமைகின்றது.

"அன்புக்கும் உண்டோ அடைக்கும்தாள்" என்ற வள்ளுவரின் வாசகத்தை நினைவு கூர்ந்து இந்நிகழ்வினைச் சிறப்பாக ஏற்பாடு செய்த என்றும் எனது அன்புக்கும் நன்றிக்குமுரிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சியத் தலைவர், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் அங்கத்தவர்கள் பேராளர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தினரின் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் எதிர்வரும் காலங்களில் எமது கல்லூரியும் தங்களின் பழைய மாணவர் சங்கமும் மற்றும் கலையரசி நிகழ்வும் நிலைபேறுடைய விருத்தியுடன் செயற்படவேண்டும் என்றும் எந்தவித சுயநல நோக்குமின்றிச் செயற்படும் தங்கள் அனைவருக்கும் எல்லாம் வல்ல இறைவன் சகல வல்லமைகளையும் வழங்க வேண்டும் என வேண்டி வாழ்த்தி வணங்குகின்றேன்.

"தமிழரெம் வாழ்வில் தாயென மிளிரும்
தனிப்பெரும் கலையகம் வாழ்க!"

நன்றி

*I. Thayanandarajah*
**Principal**
**Jaffna Hindu College**
**Jaffna**

# Message from President JHC OBA UK



It indeed gives me great pleasure and delight in welcoming you this evening to Kalaiyarasi 2015, to celebrate '125 years of excellence' of our beloved Alma Mater.

This Kalaiyarasi has been organised in a spectacular style to thank our INTHU ANNAI for the services she has rendered to the Tamil community for the last 125 years.

It is the proudest moment of my association with JHCOBA UK. The old boys of JHC are spread across the globe and we, the JHCOBA UK, are proud to be the first Old Boys Association to be established outside Sri Lanka, back in 1987. I am very proud to have been a part of forming the OBA UK and it has been a great joy to watch our OBA develop and grow since its inauguration three decades ago.

I take this opportunity to thank fellow OBA UK members to elect and allow me to serve as President at the period where JHC has reached 125 years of excellence. I also would like to extend my warmest congratulations to our Kalaiyarasi 2015 committee for their endless efforts and true commitment to achieve this landmark event of such high calibre.

Kalaiyarasi it is not only an evening of entertainment but also an occasion which will bring the alumni and their families together to strengthen the friendship and the loyalty to our Alma Mater. I am confident this event will brace the unity, goodwill and ties among our beloved community.

Over the past 28 years, our commitment and loyalty to our gracious INTHU ANNAI has enabled each one of us to reach new heights.

We are continuously supporting our college and the community in a number of ways. This year we have successfully opened the library in our college, Initiated by the previous committee, in memory of our former teacher, the late Mr Sivaramalingam.

We have also continued to support Mahadeva Padippakam in the Mullaithivu district and in March this year, we provided educational assistance to 895 Tamil children in Budulla.

I would like to invite all the old boys to take part in our 125 year celebrations this September in Jaffna. There are numerous events that have been organised by the 125 year celebration committee. The excellent education and virtues that we obtained through our experience at JHC has greatly contributed to our successful careers. This is the right time to express our gratitude to INTHU ANNAI.

Finally on behalf of our management committee, I extend my sincere thank you to all our sponsors and well-wishers for their ongoing support and you for your presence here today to make this event a great one.

I wish you all a good and enjoyable evening.

"Together We Are Stronger"

**Saba Suganthan BEng (Hons)**
President
JHCOBA UK



# Message from Colombo OBA president



இலண்டனில் யாழ் இந்துவின் மைந்தர்களின் விழாவும் மலரும் சிறக்க வாழ்த்துக்கள்

இலங்கையில் கல்வித்துறையிலும் கல்வியோடிணைந்த கலைகள் மற்றும் விளையாட்டுத் துறையிலும் பாராட்டத்தக்க சாதனைகள் பல படைத்த யாழ் இந்துவின் மைந்தர்கள் இன்று பூமி பந்தெங்கும் பரவலாக வாழ்ந்து வருகின்றனர்.

ஆனாலும் யாழ் இந்து வளர்த்தெடுத்த மாணவமணிகள் அன்னையை நினைப்பதிலும் தங்களை உருவாக்கிய சைவ மணம் கமழும் யாழ் இந்துக் கல்விக் கூடத்தை நினைப்பதிலும் பெருமையும் பெருமிதமும் அடைவதில் ஆனந்தம் அடைபவர்கள்.

கல்லூரி வரலாற்றில் 125 வருட வளர்ச்சி என்பது மகிழ்ச்சிக்குரிய சாதனைதான்.

பிறந்த மண்ணிலிருந்து நெடுந்தூரத்துக்கு அப்பால் கடுங்குளிரில் வாழ்ந்தாலும் தங்களுக்கு கல்வி போதித்து செல்லுமிடமெல்லாம் செல்வாக்காக வாழ வழி காட்டிய கல்லூரியின் வளத்தையும் தரத்தையும் பேண ஆவன செய்து வரும் யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சிய கிளை, கல்லூரி 125 வது நிறைவினை யொட்டி இலண்டனில் இவ்வாண்டு பெரு விழாவைக் கொண்டாட இருப்பதும் அதையொட்டி கலையரசி சிறப்பு மலரை வெளியிட ஒழுங்கு செய்திருப்பதும் மகிழ்ச்சி தரும் செய்தி.

யாழ் இந்துக் கல்லூரி கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் சார்பில், பெருமைக்குரிய யாழ் இந்து உருவாக்கிய மாணவமணிகள் இலண்டனில் நடாத்தும் விழாவும் விழாவையொட்டி வெளியிடும் கலையரசி மலரும் சிறக்க வாழ்த்தி மகிழ்கின்றேன்

**எம். என் அசோகன்**
தலைவர்
யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்
கொழும்பு

# MESSAGE FROM PRESIDENT OF JAFFNA HINDU COLLEGE OLD BOYS' TRUST

As President of the Board of Trustees of the OBA (Colombo) of our great school, I am happy to send this message to the souvenir to be published in connection with the Kalaiarasi 2015 Celebration of the Old Boys Association of Jaffna Hindu College, UK. I must congratulate UK OBA for bringing this Ceremony to this level as one of the most popular annual event, by sponsoring successfully for the past many years. While this program provides an opportunity for our brothers and sisters to get together, it is heartening to note that the funds raised are utilized for development of our school and the community. Our best wishes to your president and the members for a successful and rewarding celebration.

Mr.V.Kailasapillai
President.



# Message from Jaffna OBA president



தமது தாய் மண்ணை விட்டு, நிர்ப்பந்தங்கள் காரணமாகத் தனித்தும், கூட்டாகவும் பெருமெடுப்பில் வெளியேறி, உலகெங்கும் பரந்து வாழும் சமூகங்களை 'டயஸ்போறா' என்ற சொல் குறித்து நிற்கிறது.

டயஸ்போறா (புறம் பரவு சமூகம்) சமூகங்களுக்கு ஒரு கூட்டு உளவியல் உண்டு.

அக் கூட்டு உளவியலைக் கட்டமைப்பதிலும், பேணுவதிலும் நினைவுகளை மீட்டல், தாய் மண்ணுடனான நிறுவன ரீதியான தொடர்பு, தாய் மண்ணின் வாழ்நிலை மேம்பாட்டிற்கான பங்கேற்பு முயற்சிகள் என்பவை பெரும் பங்கு வகிக்கின்றன.

ஐக்கிய இராச்சிய, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் வருடாந்தம் நடாத்தி வரும் 'கலையரசி' நிகழ்விற்கு 'வருடாந்தக் கலை மற்றும் நிதி திரட்டும் நிகழ்வு' என்பதற்கு அப்பால் விரி படு அர்த்தங்களும் உண்டு.

இவ்வாறான நிகழ்வுகள் மண்ணில் வாழ்ந்த அந்த நாட்களை நீள நினைத்திருக்கவும், எமது ஆளுமைகளைச் செதுக்கிய மனிதர்களினதும், நிறுவனங்களினதும் நினைவாக, மண்ணினதும் மக்களினதும் மேம்பாட்டிற்காக எமது பங்களிப்பினை வழங்கும் மன உந்துதலை ஏற்படுத்தவும் வழி செய்கின்றன.

இவற்றினூடாகத் தமிழ்ப் புறம் பரவு சமூகக் கூட்டு உளவியலைப் பேணுவதிலும் இந் நிகழ்வு தனக்கேயான ஒரு பங்களிப்பை வழங்கி நிற்கிறது.

தாய் மண்ணிலும் இன்று பல மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. சம கால உலகத்தினரோடு சரி நிகர் சமானமாக வாழத் தேவையான பல்வேறு திறன்களை எமது சந்ததி பெற்றாக வேண்டும்.

எனினும் அவற்றை வழங்குவதற்கு ஏதுவாக நிறுவன ஒழுங்குகளும், கல்வி முறைமையும் மாற்றம் பெறவில்லை.

எனவே மாற்றங்களை நாமே முன்னெடுக்க வேண்டிய சூழ்நிலை இங்கு நிலவுகின்றது. இதற்கு ஏதுவான உட்கட்டமைப்பு, செயன்முறைகள், திறன்கள் என்பவற்றை வழங்குவதில் தமிழ்ப் புறம் பரவு சமூகம் காத்திரமான பங்களிப்பை வழங்க முடியும்.

ஐக்கிய இராச்சிய, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் காலத்திற்குக் காலம் மேற்கொண்ட திட்டங்கள், மிக அண்மைக் காலத்தில் நிறைவேற்றிய சிவராமலிங்கம் ஞாபகார்த்த நூல்நிலையத் திட்டம், மகாதேவா படிப்பகங்களுக்கு வழங்கி வரும் எண்ணற்ற உதவிகள், என்பவை தமிழ்ப் புறம் பரவு சமூகம் தாய் மண்ணில் மேற்கொள்ளக் கூடிய திட்டங்களிற்கு மிகச் சிறந்த முன்னுதாரணங்களாகத் திகழ்கின்றன.

இம் மண்ணில் மரணத்துள் வாழ்ந்து, இன்றும் நிலைத்து நிற்கும் தாய்ச் சங்கத்தினரான யாழ்ப்பாணப் பழைய மாணவர் சங்கத்தினராகிய நாங்கள், என்றும் போல எம் உறவுகளாகிய நீங்கள் மேற்கொள்ள முன்வரும் திட்டங்களை, மண்ணிலிருந்து நடைமுறைப் படுத்த உறுதுணையாக இருப்போம் என்பதை மீளவும் வலியுறுத்துகின்றோம்.

கலையரசி நிகழ்வு சிறக்க, எல்லாம் வல்ல சிவஞான வைரவப் பெருமானின் அருளாசிகளை வேண்டி நிற்கின்றோம்.

**சி. சுந்தரேஸ்வரன்**
தலைவர்,
யாழ்ப்பாணம் பழைய மாணவர் சங்கம்

# அதிபரின் வாழ்த்துச் செய்தி
# தண்டுவான் அ.த.க பாடசாலை



போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வன்னிப்பிராந்தியத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தில் தண்டுவான் கிராமத்தில் யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சிய கிளையின் அனுசரனையுடன் சைவ மகா சபையால் நடத்தப்படும் மகாதேவா படிப்பகம் மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

தற்போது 125ம் ஆண்டு நிறைவை கண்டுள்ள யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவர்கள் உலகின் எந்த பிரதேசத்தில் வாழ்ந்தாலும் தங்களுடைய கல்லூரியின் பெயரால் தாய்மண்ணை வளம் படுத்த வேண்டும் என்ற நோக்கில் ஆற்றி வரும் பணிகள் பாராட்டப்பட வேண்டியவை.

எமது நாட்டில் பல கல்லூரிகளின் பழைய மாணவர் சங்கங்கள் அவர்களுடைய கல்லூரியை மையப்படுத்தி பல்வேறுபட்ட அபிவிருத்திகளை செய்து வந்த போதிலும் இவர்கள் தங்கள் கல்லூரிப் பணியுடன் நின்றுவிடாமல் உண்மையான தேவைப்பாடுடைய இடங்களை தேடிச்சென்று உதவுவது சிறப்பம்சமாகும்.

அத்தகைய சிறப்புமிக்க தனித்துவத்தின் ஒருவெளிப்பாடாக மிளிர்ந்துள்ள தண்டுவான் மகாதேவா படிப்பகம் தண்டுவான், பழம்பாசி, ஒதியமலை, நெடுங்கேணி, கரடிப்பிளவு, இத்திமடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வருகின்றது.

மேற்படி கிராமிய மட்ட மாணவர்களின் தேர்ச்சி வீதம் படிப்பகத்தின் தோற்றத்தின் பின் கணிசமான அளவு உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

கலை, வர்த்தக பிரிவுகளுக்கு மட்டுமே தெரிவாகிய க.பொ.த சாதாரணதர மாணவர்கள் தற்போது கணித, உயிரியல் பிரிவுகளுக்கும் செல்லக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த படிப்பகத்தில் கல்வி கற்பதற்கு மட்டுமல்லாது க.பொ.த சாதரணதரத்தில் சிறந்த பெறுபேற்றை பெற்று வறுமை காரணமாக உயர்தர கல்வியை தொடர்ந்து கற்க சிரமப்படும் மாணவர்களுக்கும் அவர்களுடைய தொடர்ச்சியான கற்றலுக்காக யாழ் இந்துவின் பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சிய கிளையினர் உதவ முன்வந்து இருப்பதுடன் மூன்று மாணவர்களுக்கு அவ் உதவிகளை வழங்கிக்கொண்டிருப்பது குறிப்பிடத் தக்கது.

இதே போன்ற மாணவர்களின் கல்வி மேம்பாட்டை நோக்காகக் கொண்ட பல்வேறு பட்ட பணிகளுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கி வரும் யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சிய கிளையினருக்கும் அதற்கு பல்வேறுபட்ட வகையிலும் உறுதுணையாக நின்று செயலுருவாக்கம் செய்து வரும் சைவமகாசபையினருக்கும் கிராம மக்கள் சார்பிலும், மாணவர்கள் சார்பிலும், பாடசாலை சமூகம் சார்பிலும் இக் "கலையரசி" இதழினூடாக நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதுடன் இவர்களுடைய பணிகள் மேலும் விரிவடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்

**பன்னீர்ச்செல்வம்**
அதிபர் தண்டுவான் அ.த.க பாடசாலை
(பொறுப்பாசிரியர் மகாதேவா படிப்பகம்)



# RiverSure
Insurance

***Building Business on reputation is our goal***

## Need an Insurance?

Make sure you are covered adequately.




We provide insurance for the following:

- ✓ Home Contents & Building Insurance
- ✓ Motor Insurance
- ✓ Shop and office Insurance
- ✓ Restaurant and Take away Insurance
- ✓ Charities Insurance
- ✓ Travel Insurance
- ✓ Event Insurance
- ✓ Medical Insurance
- ✓ Care Home insurance

**And many more!**

## Contact us on:

Tel: 0208 905 8881 / 8831,
Fax: 0208 905 8271
info@riversure.com
www.riversure.com

Knightsbridge House, Kingsbury Road, London, NW9 8XG



# Secretary's Report

Today, Jaffna Hindu College Old Boys' Association (UK) proudly celebrates our school's 125th year anniversary with Kalaiyarasi 2015. It gives me great pleasure to welcome you all to the annual cultural evening 'Kalaiyarasi 2015' which I am sure you will thoroughly enjoy.

The current committee took over in October 2014 under the leadership of Mr Saba Suganthan. Together, the committee has worked enthusiastically on many projects over the last nine months. Within weeks of taking charge, we have successfully hosted the annual dinner and dance event, Jolly Vibe that raised more than £1100.

At our first management committee meeting, we decided to take up Personal and Professional Development (PPD) of teachers and students as our primary project for 2015. All the proceeds from Kalaiyarasi 2015 will go towards this project. As a first step, we organised a seminar on 22nd Febuary 2015 titled UPSKILLING - "ASPIRE TO A FUTURE" to formulate a Personal and Professional Development (PPD) plan. As another initiative under the PPD project, we also teamed up with Jaffna and Colombo branches and organised a get together for college staff at Tilko hotel in Jaffna.

As part of the Knowledge Bridge project (அறிவுப் பாலத் திட்டம்), we provided exercise books and stationery packs not only to Jaffna Hindu College students but also to schools in Badula and Mullaithivu. We continue to provide educational assistance to 'Mahadeva Padippakam' in the Mullaithivu district, and currently looking to expand this project to other underprivileged areas in North and East of Sri Lanka.

For the first time in our OBA's history, we have organized a free cultural function titled "Yarl Inthuvin Chithirai Thiruvilazh", to bring out hidden talents amongst our younger generation. This proved to be a major success, and we were able to raise in excess of £4000.

It is overwhelming to see small groups of members and individuals coming forward to help our beloved alma matter, by undertaking projects on their own through our OBA. Members from class of 1992 have raised £750 to install a security camera system for our school.

Our committee members Mr Chandraprakash & Mr Jeyaprakash have also come forward to renovate the "C" block at a cost of £7500.

The JHCOBA UK has grown to its present stature through its dedication and personal commitment of the past and present management committees, and the supportive membership. Hopefully, this dedicated spirit will continue to be fostered by the younger generation of Jaffna Hindu Old boys in the UK.

As the current secretary, I have really enjoyed working closely with the committee and fellow members who have provided overwhelming support for me to fulfill my role. I would like to extend my heart felt gratitude to you all.
Thank You.

**Sinnathurai Kirupakaran**
Secretary

# LycaFly

**CALL 24X7**
**0207 132 32 32**
**www.LycaFly.com**

NO.1 AGENT

# for COLOMBO

## SriLankan Airlines







QATAR AIRWAYS · Emirates · JET AIRWAYS · ETIHAD · TURKISH AIRLINES · OMAN AIR · BRITISH AIRWAYS · AIRFRANCE · TAP PORTUGAL · KUWAIT AIRWAYS · AIR CHINA · AIR INDIA · Philippine Airlines · PIA Pakistan International · air mauritius · KLM · virgin atlantic · EVA AIR

## Any Airline... Any Destination... Lowest fare Guaranteed

PLUS **FREE** LYCAMOBILE TOP-UP WHEN YOU BOOK WITH US
(hundreds & thousands of free minutes worldwide)
**T&Cs Apply - Top-up offer excludes on selected airlines*

## Amazing Holiday deals!























**Many more amazing holiday deals. Hurry! Book Now | Email: holidays@lycafly.com**

CANARY WHARF
Walbrook Building, 195 Marsh Wall
London E14 9SG · 020 7132 0100

EAST HAM
180 High Street North,
East Ham E6 2JA · 0207 132 0056

WEMBLEY
14 Ealing Road, Wembley,
London HA0 4TL · 0207 132 0055

COLOMBO
No. 08, Kinross Avenue, Colombo 04.
Sri Lanka · 0117 623 232

IATA · ATOL PROTECTED 9624



# 150 ம் ஆண்டு நோக்கிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பயணம்....


Selvathurai Senthilnathan
President- JHCOBAUK (2011-2012)


2040 ம் ஆண்டில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தனது 150 ஆவது அகவையில் எங்கே? இது பற்றிய ஒரு ஆய்வு செய்யுங்கள், இது எனக்கு கொடுக்கப்பட்ட தலைப்பு.

பாடசாலையின் ஆரம்பத்தைக்கூறி, அதன்பின் சிலமுக்கிய ஆண்டுகளை குறிப்பிட்டு, தற்போதைய நிலையை முன்னிறுத்தி காட்டியபின் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தனது 150 ஆவது அகவையில் எங்கே எப்படி இருக்கும்? எப்படி இருக்க வேண்டும்!! என்பதை சிறிது எதிர்பார்ப்புக்களோடு பார்க்க முனைகின்றேன்.

## 1890 - Beginning

பள்ளிக்கூடம் ஆரம்பம் திகதி ஐப்பசி 3 ம் திகதி, பள்ளிக்கூடத்தின் பெயர் "THE HINDU HIGH SCHOOL" இடம் ஒரு சிறிய பந்தல் (தற் போதைய காணி), மாணவர்கள் 80 பேர், தலைமை ஆசிரியர் அப்பாப்பிள்ளை, பரிபாலனம் "யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை"

## 1915 - Silver

London Matriculation Classes started
பாடசாலையின் 25 வது ஆண்டு கொண்டாடப்பட்டது

## 1940 - Gold

College topped the London Matriculation pass list among Jaffna school
பாடசாலையின் 50 வது ஆண்டு

## 1965 - Diamond

75th Anniversary of the founding of the college was celebrated
பாடசாலையின் 75 வது ஆண்டு

## 1990 - Centenary

100th Anniversary of the founding of the college was celebrated by JHCOBAUK in Tooting, London on 9th June 1990. பாடசாலை மாணவர்கள் தொகை - 2160, ஆசிரியர்கள் - 74

## 2015 -125 years

125th Anniversary of the founding of the college will be celebrated in September this year in Jaffna and by the OBA's around the world throughout this year.
மாணவர்கள் 2530 பேர், ஆசிரியர்கள் 106, அலுவலக உத்தியோகத்தர்கள் 18.

யாழ் இந்துக் கல்லூரியின் தற்போதைய நிலைமையும் மற்றும் பாடசாலையின் வளர்ச்சியும் அதில் உலகளாவிய பழைய மாணவர் சங்கங்களின் பங்களிப்பும் அனைவரும் அறிந்ததொன்றே.

இன்றைய நிலையிலும் பாடசாலையின் தேவைகள் பல இருபதையும் அதன் அவசியத்தையும் பாடசாலை நிர்வாகத்தினரிடம் இருந்து எம்மால் புரிந்து கொள்ள முடிகின்றது அவற்றில் சில -

- பிராத்தனை மண்டபம் சீரமைப்பு
- குமாரசுவாமி பார்வை அரங்கம் சீரமைப்பு
- விஞ்ஞான ஆய்வு கூடம் விஸ்தரிப்பு
- மலசலகூட வசதி விஸ்தரிப்பு
- தளபடவசதிகள்
- கட்டிடங்கள் மறு சீரமைப்பு
- மாதிரி வகுப்பறைகள்

இவற்றுடன் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணி தவிர்த்து இவ்வருடம் (2015) ஆடிமாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள விடுதி விஸ்தரிப்பு திட்டம் மற்றும் மூன்று நிலையகளில் (stages) நிறைவேற்றப்பட இருக்கும் விளையாட்டு மைதான விஸ்தரிப்பு திட்டமும் உள்அடங்கும் .




Clean, Green & Sustainable
Inclusive & Divers
Well Governed & Empowered
Attractive> Thriving &Well Built
Accessible & Connected
Vibrant & Culturally Rich
Safe> Healthy & Active
Prosperous & Learning

மேற்படி சிறப்பு அம்சங்களைக்கொண்டு யாழ் குடாநாட்டில் தனக்குரிய தனிச்சிறப்புடன் வந்தாரை வாழ வைக்கும் தனித்துவம் பெற்றதும்,

நாட்டிற்கும், உலகின் பல தேசங்களின் வளர்ச்சிக்காக தேவைப்படும் அறிவு ஜீவிகளை, மனித யந்திரங்களை உருவாக்கும் ஒரு கலைக்கூடமாகவும் யாழ் இந்துக் கல்லூரி இன்னமும் திகழும் என்பதில் எது வித சந்தேகமும் இல்லை .

2040ம் ஆண்டில் இந்த இலக்கை அடைவதற்கு பாடசாலை நிர்வாகத்தினர் பங்களிப்பும் உலகளாகிய பழைய மாணவர்கள் சங்கங்களின் பங்களிப்பும் எவ்வாறு இருந்தால் நிறைவான பயனடைய முடியுமெனவும் சிறிது ஆய்வு செய்து பார்ப்போம்.

மேலும் இந்த ஆய்வினை மூன்று நிலைகளில் அனுகுவோம். முதலில் நாம் எங்கு எந்த நிலையில் உள்ளோம், இரண்டாவதாக எந்த நிலைக்கு போக வேண்டும், மூன்றாவதாக அந்த நிலைக்கு எப்படிப் போவது ?




## முதல் நிலை (Stage 1) நாம் எங்கு உள்ளோம்?

### நிறைவாக உள்ளவைகள்

பாடசாலையின் கல்வி நிலையிலும், பரீட்சை முடிவுகளிலும் திருப்தி காணப்படுகின்றது.
பாடசாலையின் கட்டட அமைப்புக்களும், உபகரண வசதிகளும் தற்போதைக்கு போதுமானவையே.
ஆசிரியர்களின் எண்ணிக்கையும் போதுமானவையே

### குறைவாக உள்ளவைகள்

அனுபவம் மிகுந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது.
மாணவர்களிடையே பெற்றோர், கற்பிற்றோர், மற்றோர் இவர்களின் பரஸ்பர உறவுகள் (Discipline) போதிக்கப்படவேண்டும் .
பாடசாலையின் விடுதி வசதி இன்னமும் சீராக இல்லை
விளையாட்டு மைதான விஸ்தரிப்பு முழுமையடையவில்லை
விளையாட்டுத் துறையில் குறிப்பிடத்தக்க முன்னிடம் இல்லை
மாணவர்களிடையே போதைப் பொருள்பாவனையால் வரும் உடனடியான பாதிப்புக்களும் பின் விளைவுகளும் பற்றிய அறிவுரைகள் போதிய அளவு உணர்த்தப்படாமல் இருப்பது

## இரண்டாவது (Stage 2) நாம் எந்த நிலைக்கு போக வேண்டும்?

அனுபவம் மிகுந்த ஆசிரியர்களின் தேவைகள் உணரப்படவேண்டும், ஆசிரியர்கள் மாணவர்களின் இடையே பரஸ்பர நல்லுறவு பேணப்பட வேண்டும்.
பாடசாலையின் விடுதி வசதி அல்லது புதிய விடுதி பூரணத்துவப்படுத்தப்படவேண்டும்
விளையாட்டு மைதான விஸ்தரிப்பு முழுமைப்படுத்தப்பட வேண்டும்
விளையாட்டுத் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் வேண்டும்
மாணவர்களிடையே போதைப் பொருள்பாவனையால் வரும் உடனடியான பாதிப்புக்களும் பின் விளைவுகளும் பற்றிய அறிவு விசாலமானதாக இருக்கவேண்டும்.

## மூன்றாவது நிலை (Stage 3) அந்த நிலைக்குக்கு எப்படிப் போவது ?

பாடசாலையின் தேவைகளும் பற்றாக்குறைகள் பல இருபதையும் இனம் கண்டு அவசியத்துக்கேற்ப பூர்த்தி செய்யப்பட வேண்டும்.
மாணவர்களிடையே வளப்பமுள்ள, வாழ்வில் வெற்றி காண்கிற, மேன்மேலும் முன்னேற்றம் அடைந்த உலகமெங்கும் பரந்து இருக்கும் , முழு மனதோடு உதவும் பழைய மாணவர்களை வரவழைத்து தங்கள் வெற்றியின் படிகளை மாணவர்களுக்கு எடுத்துரைத்து மாணவர்களை ஆர்வப்படுத்த வேண்டும்.
இவை ஆண்டு தொடக்கத்திலையே மாதத்தில் இருமுறை, வருடத்தில் குறைந்தது இருபது பணிமனை அல்லது கருத்து அரங்குகளாவது நடத்த ஏற்பாடு செய்யவேண்டும்.

பின் குறிப்பிடப்படும் சில முக்கிய முயற்சிகளுக்கு பாடசாலை நிர்வாகம் அகில உலக பழைய மாணவர் சங்கங்களுடன் இணைந்து பணியாற்றவேண்டும் , இவை அரச வரைமுறைகளுக்கு உட்பட்டதாகவே இருக்கும்.

## Health Centre

(பாடசாலை வளாகத்துக்குள் இயங்குவது, மாணவர்களின் நலனுக்கவே இயங்கும்) திறமை மிக்கபழைய மாணவர்கள் தங்கள் வரவை, சேவையை ஆண்டு தொடக்கத்திலேயே பாடசாலைக்கு அறியத்தரவேண்டும்.

## Knowledge & Awareness Centre

மிகமுக்கியமாக உயர்தரமாணவர்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியையும், அறிவு விரித்தியையும் பெருக்குவது.
பிறமொழித்தேர்ச்சி, நேர்முகத்தேர்வுப்பயிற்சியும், நுண்திறனும், நுணுக்கமரபுகளும் பற்றிய அறிவுரைகள் வழங்குவது (Techniques )

மீண்டும். திறமை மிக்க பழைய மாணவர்கள் தங்கள் வரவை,சேவையை ஆண்டு தொடக்கத்திலேயே பாடசாலைக்கு அறியத்தரவேண்டும்.

## Sports up skilling Centre

இந்த நிலையம் பாடசாலை வளாகத்துக்குள்தான் இருக்கவேண்டிய அவசியம் இல்லை, நடமாடும் விளையாட்டுப்பிரிவு (Mobile Unit)ஆகவும் இயங்கலாம்,தேர்ச்சித்திறம் வாய்ந்த, பயில்திறமையுள்ள, தனியாற்றல் படைத்தவர்களின் வழிகாட்டலுடன் நாட்டின் பல பாகங்களிலும் பணி மனைகளை ஏற்படுத்தலாம்.

எனக்கு இந்தமூன்று முயற்சிகளும் உலக பழைய மாணவர் சங்கங்களின் பொறுப்போடும் மேற்பார்வையுடனும் வெற்றிகரமாக நடத்தமுடியும் என்பதில் எனக்கு எந்தவித ஐயப்பாடும் இல்லை,

கட்டுரையின் நோக்கம் வளர்ச்சிப் பாதையைக் காட்டுவதே, வெற்றி பெறுவது எங்கள் விடா முயற்ச்சியில் தான் தங்கி இருகின்றது.

துணை நூல்கள்:-

Centenary Souvenir Jaffna Hindu College -1905-2005
The Young Hindu




# IRIS BUSINESS SOLUTIONS

**Accountants and Business Advisers**

Business Start ups
Corporate Tax Planning
Payroll
VAT

Company Secretarial
Estate Planning
Personal Tax Planning

Software Support & Training
Fee Protection
Self-Assessment

### Who we are

IRIS Business Solutions was established in 2007.

Sutha trained with a leading firm of chartered accountants and on completion of his initial training period, moved to a respected local practice located in Harrow. Here he was able to broaden his experience and further his interest in dealing with the affairs of SMEs.

Initially based in Harrow, Middlesex. Our approach of working closely with our clients and taking an active interest in our clients' businesses led to rapid growth.

### Contact us

Address:
84 Albert Hall Mansions
Prince Consort Road
London
SW7 2AQ

Email:
info@irisbs.co.uk

Telephone:
020 8429 5995

Fax:
020 8711 5979

Avoid the pain by outsourcing the who responsibility to IRIS Business Solutions, 25 st with settled and disciplined methodology.Th lifeblood of every successful business. We a renowned for producing top quality financ reports.Free your business from unnecessa Payroll stress. Our fixed-rate service provides cost-effective solution.

www.irisbs.co.uk

# History
## of Jaffna Hindu College Old boys' Association (UK)

JHC OBA (UK) is a unique organisation in that it is the first ever overseas OBA established in 1987 by a band of young old boys inspired and co-ordinated by Mr K Seveal. The small group of enthusiastic old boys gathered in Holborn and unanimously elected Mr T S Perinpanathan as the President (1987-1990), who continued to take active part in the affairs of the association for long years till his untimely death. For unknown reasons, however, the OBA was defunct for a few years soon after the inaugural meeting.

The OBA was revived in 1990 with a new constitution by the late Mr S Uthayalingam, Mr T Ganeshwaran, Mr R Sureshkumar and several others. The 1987 committee was re-elected and they successfully celebrated the centenary of the School at Lola Jones Hall in South London. Since then the OBA has undergone a period of steady growth, to the admiration and envy of other organisations, focusing on fulfilling the needs of the Alma Mater which has faced untold hardships during the past decades.

Dr.M.Vetpillai was elected as President (1991-93) and during his presidency, with the help of other enthusiastic committee members; OBA was able to initiate a scholarship programme for the welfare of needy students at JHC through funds collected by arranging cultural programmes and from donations by our members.

Under the presidency of talented Dr S Jothilingam (1993-97), the Scholarship Fund not only grew at a rapid pace, but financial assistance was also provided to the college to buy furniture and office equipment. With a view to expand the small sports ground of JHC, the committee was able to purchase a part of the adjacent land.

These magnificent efforts continued under the able presidency of Mr T Ganeshwaran (1997-2000), who successfully organised the International Convention of OBAs around the world in 2000, to coincide with the millennium celebrations (Kalaiyarasi 2000). A highly rewarding raffle draw netted the OBA a handsome seventeen thousand pounds (£17,000), which was donated to the School Scholarship Fund.

The highlight of the 'Kalaiyarasi 2000' was the visit by Mr A Srikumaran, the Principal of JHC, as the Chief Guest. He provided the audience with a vivid account of the hardships the students and teachers face in the day-to-day school life due to lack of books and other basic amenities. Responding to his request, our old boys readily extended their ever-willing hands in the subsequent years, helping the Alma Mater in many different ways.

Mr A F Mariadas (2000-2002) in his capacity as the succeeding president continued the good work done by the OBA, successfully organising the annual cultural evening 'Kalaiyarasi 2001' to collect funds and contributed to the development of the Alma Mater.

The next president was Mr N Selvarajasingam (2002-2004) who continued to function with vigour and

enthusiasm upholding the ethos of the OBA and had very cordial relationships with the JHC-OBAS around the world, participated in the international conference in Germany, and helped to develop the college.

Unfortunately in 2002, the JHC OBA UK became a victim of its own growth. Disenchanted by the traditional school centred focus of the JHC OBA (UK), some members chose to establish another Association. Despite untiring efforts by the president and those of our father figure Mr V Sivasupramaniam, a veteran retired teacher and chief guest at the 'Kalaiyarasi 2003', and many other well-wishers, it had not been possible to unify the two associations under one banner.

In 2004, the OBA was able to honour our highly respected teacher Mr.S.Sivaramalingam as our Chief Guest and the former Principal Mr S Ponnambalam as the guest of honour at the 'Kalaiyarasi 2004' for the centenary celebration of the OBA. How can anyone of his students forget Mr.Sivaramalingam's wonderful illustration of 'Ramayanam', let alone his golden advice on moral values mingled with jokes like sugar-coated tablets?

When Mr.V.Shanmugalingam was president of OBA in 2004-2006, he was instrumental in carrying out the hostel renovation programme Phase 1 in memory of our highly respected boarding master late Mr.K.S.S. Subramaniam .

One can gauge the amount of respect and gratitude the old boys held for KSS by the numerous articles carried by the 'Kalaiyarasi 2006' magazine. In addition, the OBA was able to complete a much needed preschool project in Maritimepattu, Mulaithivu, which was affected by the civil war.

During the presidency of Mr.A.Thiruketheeswaran (2006-2008), OBA contributed funds to purchase the land and the house next to Cumarasamy hall to be used as quarters for the principal.

In addition, OBA offered financial help to the children in Vanni affected by the tsunami, and donated funds to the centre for health care in Vanni for the use of much needed mobile medical unit. During this period, the OBA invited Deputy Principal Mr.P.Maheswaran as the chief guest for the OBA's 20th anniversary 'Kalaiyarasi 2007', celebrated the 80th birthday of our famous teacher, Mr.M.C.Francis and participated in the inaugural function of OBA Norway.

On 28th Nov.2007, It is noteworthy that the presidents and the committee of both factions negotiated to come under one banner of JHC OBA again.



When Mr K Seveal (2008-2010) was president, OBA raised funds through the 'Kalaiyarasi 2009' and Dinner & Dance event and completed the process of renovating the quarters for the principal and it was ceremonially opened by the president on 16/09/2009.

OBA also donated sports and photographic equipment to the college and donated funds to relieve the suffering of IDP in Vanni.

Mr. S. Senthilnathan (2010-2012) as president OBA raised funds

through 'Kalaiyarasi 2011'. OBA as a new initiative arranged free evening classes for vulnerable children at Mahadeva paddippaham, Ottisuttan, Vanni.

OBA also completed the Principal quarter's project. In 2012, 25th year of the JHC OBA (UK) was celebrated with a successful symposium involving the eminent old boys of JHC followed by a well appreciated 'Kalaiyarasi 2012'.

OBA also sponsored two students from JHC to participate in International junior Science Olympiad in South Africa.

Mr.K.Skandamoorthy (2012-2014) organised 'Kalaiyarasi 2013 & 2014' and fund raising events like Twenty20 & Jolly Vibe. the funds were used to build much needed toilet facilities at the college and for further needs of the college.

In 2014, Sivaramalingam Memorial Library project was initiated at a cost of £9,000. OBA also sponsored a student from JHC to participate in International junior Science Olympiad in Philippines.

Mr Saba Suganthan (2015-2016) was elected as president in Oct 2014. Under his leadership, new management committee has overseen successful completion of the Sivaramalingam Memorial Library and on 23rd March 2015, the library was ceremonially opened by Master P Darukeesan who came first in the all island ranking in the Maths stream A/L results 2014. In February 2015, the OBA organised an excellent seminar titled UPSKILLING 'Aspire to a future', a personal development plan involving eminent old boys of JHC to help the students and young employees in UK and at JHC.

In March 2015, more than1000 children were provided educational assistance including JHC and schools in Mullaithivu and Budulla to mark 125 years of excellence of JHC by the OBA. First time in the history, OBA UK jointly organised a teachers Get together in Jaffna with Colombo and Jaffna OBAs in March 21st 2015. It has also organised 'Kalaiyarasi 2015' on a grand scale to celebrate the 125th anniversary of JHC.

Following the footsteps of OBA UK, it is heartening to note that our brother OBAs in different countries as Canada, USA, Australia (Sydney, Melbourne), New Zealand, Germany, Norway, Switzerland and Singapore, have all joined the league offering their helping hands to our Alma Mater in a healthy competitive manner

